*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 257/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-8)***

*Name / Father's Name:* ***திரு.பிரபு த/பெ. துரைசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.08.2026.**

துவக்க நேரம் 01.08 A.N

**2ம் எதிரி (புவனேஷ்வரி) ஆஜர். 1ம் எதிரி (சுரேஷ்) ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர், அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.03.2022 அன்று காலை 10.00 மணியளவில் நான், ஆத்தூர், அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தேன்.

2) அப்பொழுது, அன்று சத்தியவாணி க.பெ ரமேஷ் சித்தம்பட்டி குட்டை, கெங்கவல்லி, கூடமலை என்பவர் அவரை தெரிந்த நபர் ஒருவர் 28.03.2022 அன்று காலை 08.00 மணியளவில் கட்டை மற்றும் கையால் அடித்ததாக என்னிடம் சொல்லி, அவரது வலது முழங்கை மற்றும் அவரது உடலில் வலி இருந்ததாக கூறினார்.

3) சத்தியவாணியை பரிசோதித்ததில் அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

i) அவரது கழுத்திலும், வலது மார்பிலும் நகக்கீறல்கள் இருந்தன.

ii) அவரது வலது முழங்கை மூட்டு நழுவியது போல் இருந்தது.

4) சத்தியவாணிக்கு சிகிச்சை அளிப்பதற்காக அவரை உள்நோயாளியாக அனுமதித்து, உரிய சிகிச்சை அளித்தேன். அவரை பரிசோதித்த எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள் மூட்டு நழுவுதல் மற்றும் எலும்பு முறிவு எதுவும் இல்லை என்று கூறியதால், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(சத்தியவாணியின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான், சத்தியவாணியிடம் கேட்டபொழுது, அவர் அவருக்கு தெரிந்த ஒரு நபர் என்றுதான் சொன்னார் என்றாலும், அந்த ஒரு நபரின் பெயரை அவர், என்னிடம் சொல்லவில்லை என்றாலும் சொன்னால் சரிதான். சத்தியவாணியை, சரவணன் என்பவர்தான் சிகிச்சைக்கு அழைத்துவந்து சேர்த்ததாக மருத்துவ பதிவேட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2) சத்தியவாணி, அவரது மகன் ஆகாஷ் என்பவருடன் சிகிச்சைக்கு வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அவர், என்னிடம் அவரது வலது முழங்கையில் வலி இருப்பதாக மட்டுமே சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

3) சத்தியவாணிக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும், அவர் வரப்பில் நடந்துசென்று வலுக்கி முள்மிளாரின் மீது விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 01.19 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.06 18:15:47 +0530

Judicial Magistrate No.2, Attur.